# இன்று இயல்பைவிட 5 டிகிரி வெயில் அதிகரிக்கும்

**சென்னை, ஏப். 6:** தமிழகத்தில் சனிக்கிழமை 15 இடங்களில் வெப்ப நிலை 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் மேல் பதிவானது. அதிகபட்சமாக சேலத்தில் 106.7 டிகிரி ஃபாரன்ஹீட் பதிவானது.

சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில் சனிக்கிழமை நில வரப்படி, அதிகபட்சமாக சேலத்தில் 106.7 டிகிரி (ஃபாரன்ஹீட்) வெப்பம் பதிவானது. திருப்பத்தூர் – 106.52, பரமத்தி வேலூர் – 105.8, வேலூர் – 105.44, தருமபுரி, ஈரோடு தலா – 105.26, திருச்சி – 104.9, திருத்தணி – 104.18, நாமக்கல் – 104, மதுரை விமான நிலையம் – 103.64, சென்னை மீனம்பாக்கம், மதுரை நகரம் (தலா)– 103.28, கோவை – 102.2, தஞ்சாவூர் – 102.2, பாளையங்கோட்டை – 101.48 என 15 இடங்களில் வெயில் சதம் அடித்துள்ளது.

தமிழகத்தின் வட மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.7) அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 3 முதல் 5 டிகிரி வரை அதிகமாக இருக்கும். ஒரு சில பகுதிகளில் வெப்ப அலை வீசக்கூடும். ஏப்.8 முதல் ஏப்.10 வரை 3 நாள்களில் வெப்ப அளவு 2 – 3 டிகிரி வரை படிப்படியாக குறைய வாய்ப்புள்ளது.

# ‘அக்னிபான்’ திட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

சென்னை, ஏப்.6: தனியார் புத்தாக்க நிறுவனம் தயாரித்த ‘அக்னிபான் சார்டெட்’ ராக்கெட் ஏவுதல் தொழில்நுட்பக் காரணங்களுக்காக மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

அந்த ராக்கெட்டை விண்ணில் செலுத்துவதற்கான புதிய தேதி மற்றும் நேரம் விரைவில் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஐஐடியுடன் ஒருங்கிணைந்து செயல்படும் ‘அக்னிகுல் காஸ்மோஸ்’ எனும் நிறுவனம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தனியார் ஏவுதளத்தை சிறிய ரக ராக்கெட்டுகளை ஏவுவதற்காக அமைத்தது. அந்த வகையில், ‘அக்னிபான் சார்டெட்’ எனப்படும் ராக்கெட்டை அந்நிறுவனம் வடிவமைத்துள்ளது.

300 கிலோ வரை எடையிலான ஆய்வுக் கலன்களை தாங்கிச் செல்லும் திறன் கொண்ட அந்த ராக்கெட், 700 கி.மீ. தொலைவு வரை செல்லக்கூடியது.

அதனை ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவன் ஏவுதளத்தில் இருந்து கடந்த மார்ச் 22-ஆம் தேதி விண்ணில் செலுத்த முடிவு செய்யப்பட்டு, இறுதிக்கட்டத்தின்போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்னையால் ராக்கெட் ஏவுதல் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து ராக்கெட்டில் இருந்த பிரச்னைகள் சரிசெய்யப்பட்டு, சனிக்கிழமை (ஏப்.6) காலை 6 மணிக்கு ராக்கெட்டை செலுத்தத் திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், கவுன்ட்டவுன் தொடங்குவதற்கு முன்பாக மீண்டும் ராக்கெட்டில் சில தொழில்நுட்பக் கோளாறுகள் இருப்பது தெரியவந்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் இரண்டாவது முறையாக ராக்கெட் ஏவுதல் ஒத்தி வைக்கப்பட்டது. அவை சரிசெய்யப்பட்டு அக்னிபான் ராக்கெட் விரைவில் விண்ணில் செலுத்தப்படும் என்று அக்னிகுல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# அனுபமா–தருண் சாம்பியன்



அனுபமா



தருண்

அஸ்டானா, ஏப். 6: கஜகஸ்தான் சர்வதேச பாட்மின்டன் சேலஞ்ச் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்யாயா, தருண் ஆகியோர் ஒற்றையர் பிரிவுகளில் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

கஜகஸ்தான் தலைநகர் அஸ்டானாவில் சனிக்கிழமை நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அனுபமா 21-15, 21-16 என இஷாராணி பரூவாவை வீழ்த்தி பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தருண் 21-10, 21-19 என மலேசியாவின் சூங் வென்னை வீழ்த்தி பட்டம் வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் சஞ்சய் ஸ்ரீவத்சவா-மனீஷா இணை 21-9, 7-21, 12-21 என மலேசியாவின் வொங்-லிம் சீனிடம் தோற்றனர்.

# கடற்கொள்ளை தடுப்பில் சாதனை: 'ஐஎன்எஸ் சாரதா' போர்க் கப்பலுக்கு பாராட்டுச் சான்று



ஐஎன்எஸ் சாரதா போர்க்கப்பல் (கோப்புப் படம்)

**புது தில்லி, ஏப்.6:** கடற்கொள்ளை தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டதற்காக இந்திய கடற்படையின் 'ஐஎன்எஸ் சாரதா' போர்க்கப்பலுக்கு கடற்படையின் தலைமைத் தளபதி ஆர்.ஹரிகுமார் சனிக்கிழமை பாராட்டுச் சான்றிதழை வழங்கினார்.

இதுதொடர்பாக கடற்படை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொச்சியில் உள்ள தெற்கு கடற்படை தளத்தை பார்வையிட சென்றபோது கடற்கொள்ளை தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட்ட 'ஐஎன்எஸ் சாரதா' போர்க்கப்பலின் குழுவினருக்கு தலைமைத் தளபதி ஆர்.ஹரிகுமார் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். ஈரானிய மீன்பிடி படகான 'ஓமரியில்' பயணித்த 11 ஈரானிய மற்றும் 8 பாகிஸ்தானிய மாலுமிகளை சோமாலிய கொள்ளையர்கள் சிறைபிடித்து வைத்திருந்தனர். இதுகுறித்து இந்திய கடற்படை அளித்த தகவல்களின் அடிப்படையில் அப்படகை ஐஎன்எஸ் சாரதா பிப்ரவரி 1 மற்றும் 2-ஆகிய தேதிகளில் இடைமறித்தது. அதன்பின்னர் கடற்கொள்ளையர்களிடம் சிக்கியவர்களை மீட்கும் பணியில் கடற்படை அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இதையடுத்து சிறைபிடிக்கப்பட்டிருந்த ஈரானிய கப்பலையும் அப்படகில் பயணித்தவர்களையும் கடற்கொள்ளையர்கள் விடுவித்தனர். எவ்வித உயிர்ச் சேதமுமின்றி அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இதன்மூலம் இந்தியப் பெருங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் என்ற இந்திய கடற்படையின் கொள்கை நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

'ஐஎன்எஸ் சாரதா' போர்க்கப்பலின் குழுவினருடன் உரையாடிய கடற்படை தலைமைத் தளபதி ஹரிகுமார் அவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்தார் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

**ஜெய்ப்பூர், ஏப். 6:** ராயல் சேலஞ் சர்ஸ் பெங்களூரு அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய ராஜஸ்தான் ராயல்ஸ் அணி பட்டி யலிலும் முதலிடத்தைப் பிடித்தது. மேலும், பெங்களூரு அணியின் விராட் கோலி 113 ரன்கள் விளாசி, ஐபிஎல் தொடரில் 7,500 ரன்க ளைக் கடந்த முதல் வீரர் என்ற சாத னையை படைத்தார். ராஜஸ்தான் அணியில் ஜோஸ் பட்லர் 100 ரன் களை விளாசினார்.

# 8-ஆவது மக்களவை தேர்தல் (1984-85)



இந்திரா காந்தி படுகொலையைத் தொடர்ந்து, நாட்டின் 29 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 514 மக்களவைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க 1984-ஆம் ஆண்டும், அஸ்ஸாம், பஞ்சாப் ஆகிய 2 மாநிலங்களின் 27 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க 1985-ஆம் ஆண்டும் இத்தேர்தல் நடைபெற்றது.

- மொத்தம் 40.03 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 5,06,058 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டன.
- 541 இடங்களுக்கு 35 கட்சிகளின் வேட்பாளர்கள், 3,894 சுயேச்சைகள் உள்பட 5,492 பேர் போட்டியிட்டனர்.
- 1984-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 24, 27 மற்றும் 28-ஆம் தேதி ஆகிய 3 நாள்களில் அஸ்ஸாம், பஞ்சாப் தவிர மற்ற 29 மாநிலங்களிலும் 1985-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் பஞ்சாபிலும் டிசம்பர் மாதத்தில் அஸ்ஸாமிலும் தேர்தல் நடைபெற்றது.
- மொத்தம் 64.01 சதவீத வாக்குகள் பதிவாகின. இது முந்தைய தேர்தலைவிட 7.09 சதவீதம் அதிகம்.
- 422 தொகுதிகளில் இருந்து பொது பிரதிநிதிகளும் 79 தொகுதிகளில் இருந்து பட்டியலின சமூகப் பிரதிநிதிகளும் 40 தொகுதிகளில் இருந்து பழங்குடியின சமூகப் பிரதிநிதிகளும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- தேர்தலில் போட்டியிட்ட 171 பெண் வேட்பாளர்களில் 43 பேர் வெற்றி பெற்றனர்.
- காங்கிரஸ் பெரும்பான்மையாக 414 இடங்களில் வென்றது. நடிகர் என்.டி.ஆர். தொடங்கிய தெலுங்கு தேசம் கட்சி 30 இடங்களிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 22 இடங்களிலும் அதிமுக 12 இடங்களிலும் ஜனதா கட்சி 10 இடங்களிலும் சிரோமணி அகாலி தளம் 7 இடங்களிலும் இந்திய கம்யூனிஸ்ட் 6 இடங்களிலும், பாஜக 2 இடங்களிலும், சுயேச்சைகள் 13 இடங்களிலும் வென்றன.
- தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, ராஜீவ் காந்தி பிரதமராகப் பொறுப்பேற்றார்.
- இத்தேர்தல் ரூ.81.51 கோடி செலவில் நடத்தி முடிக்கப்பட்டது. பிரதி வாக்காளருக்கான செலவு ரூ.2 ஆகும்.
- அஸ்ஸாம் மற்றும் பஞ்சாபில் நிலவிய கிளர்ச்சி சூழல் காரணமாக அவ்விரு மாநிலங்களைத் தவிர, நாடு முழுவதும் நடைபெற்ற முதல்கட்ட மக்களவைத் தேர்தலில் ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் 75 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றி பிரம்மாண்ட வெற்றி பெற்றது.

# சர்வதேச சட்டம் சொல்வது என்ன?

வியன்னா ஒப்பந்தத்தின் கீழ், வெளிநாட்டுத் தூதரகங்கள் தனி இறையாண்மை மிக்கவை. ஒரு நாட்டில் இருக்கும் இன்னொரு நாட்டுத் தூதரகத்துக்குள் தூதரின் அனுமதி இல்லாமல் சட்ட அமலாக்கத் துறையினர் நுழையமுடியாது.




**லண்டனிலுள்ள ஈக்வடார் தூதரகத்தில் ஜூலியன் அசாஞ்சே (கோப்புப் படம்).**

தற்போது மெக்ஸிகோ தூதரகத்துக்குள் அதிரடியாக நுழைந்துள்ள ஈக்வடாரே, பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள தங்களது தூதரகத்தில் விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு 7 ஆண்டுகளாக அடைக்கலம் அளித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

இதனால் பாலியல் வழக்கில் நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்திருந்த அவரை பிரிட்டன் போலீஸாரால் மீண்டும் கைது செய்ய முடியாத நிலை நிலவி வந்தது.

கடைசியில், ஈக்வடார் அனுமதி அளித்ததற்குப் பிறகே அசாஞ்சேவை பிரிட்டன் போலீஸார் கடந்த 2019–ஆம் ஆண்டு கைது செய்தனர்.

ஸ்